## 5. கவன ஈர்ப்பு

### வழக்கறிஞர்கள் மாயூரம் நீதிமன்றத்தைப் புறக்கணித்திருப்பது

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மாயூரம் வழக்கறிஞர்கள் சில கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி 14-4-1981 முதல், குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தினைப் புறக்கணித்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், மாயூரம் வழக்கறிஞர்கள் அனைவரும் சில கோரிக்கைகளின் காரணத்தினால், 14-4-81 முதல் மாயூரம் நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு செல்வதில்லை என்று முடிவு செய்த காரணத்தினால், கும்பகோணம் தலைமை குற்றவியல் மாஜிஸ்டிரேட் அவர்கள் 19-4-81 அன்று, வழக்கறிஞர்களின் பிரதிநிதிகளுடனும், மேற்படி நீதிமன்றத்தின் அலுவலர்களுடனும் கூட்டம் கூட்டி பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதன் பேரில் வழக்கறிஞர்களின் சங்கத்தின் பொதுக்குழு 20-4-81 அன்று கூடி தங்களுடைய போராட்டத்தை நிறுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டுள்ளனர். வழக்கறிஞர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு மேற்படி நீதிமன்றத்துக்கு 20.4.81 முதல் சென்று கொண்டிருக்கிறார்கள்.

மேற்படி போராட்டம் நீதிமன்றத்தோடு தொடர்புடையது. இதில் பொதுமக்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. அதனால் மாயூரத்தில் எவ்வித பதட்டநிலையும் இல்லை.

[முற்பகல் 10-30]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரம் குற்றவியல் இரண்டாவது வகுப்பு நீதிமன்றத்தின் நடுவர் அவர்கள் வழக்குரைஞர்களை தரக் குறைவாக நடத்துவதாகவும் ஜாமினிலே விடக்கூடிய சிறு

வழக்குகள், அதாவது ஐ.பி.சி. 324, 41 (1) போன்ற அற்ப வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களைக் கூட ஜாமீனிலே விடுவதற்கு மறுப்பதாகவும் சொல்லப்படுகிறதே, அது சம்பந்தமாக ஏதாவது முறையீடுகள் வந்திருக்கின்றனவா வழக்கறிஞர்கள் என்ன என்ன கோரிக்கைகளை வைத்து வழக்கு மன்றத்திற்கு செல்லாமல் இருந்தார்கள்? அந்தக் கோரிக்கைகள் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறைகள் அனைத்துக்குமே ஆதாரம் இருக்கிறதா என்பதை விசாரித்துத் தான் தெரியவேண்டும். உயர் நீதிமன்றம் விசாரிக்கப் பணித்துள்ளது. அந்தக் குறைபாடுகள் பற்றி அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் வந்ததற்குப் பிறகு தான் தெரியும். காரணம் இது நீதிமன்றத்தினுடைய தொடர்புடைய பிரச்னையாக இருக்கிற காரணத்தினால் நீதிமன்றம் இதை பரிசீலித்து வருகிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக முறையான விசாரணை செய்யப்படுமா? வழக்குரைஞர்கள் வழக்கு மன்றம் செல்லாமல் இருந்ததினால் சில அற்ப வழக்குகளிலே கைது செய்யப்பட்டவர்கள் கூட ஜாமீனிலே வெளியே வரமுடியாமல் பல நாட்கள் சிறைச்சாலையிலே இருந்திருக்கிறார்கள். அப்படி சிறைச்சாலையின் உள்ளே இருந்தவர்களுக்கு ஏதாவது பாதுகாப்புக் கொடுப்பதற்கு அவர்களுக்கு உதவி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அந்தப் போராட்டம் நடந்ததே 4, 5 தினங்கள் தான் என்று தகவல் அரசுக்கு வந்திருக்கிறது. பல நாட்கள் என்று சொல்வது சரியல்ல. இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் நீதிமன்ற விவகாரங்களில் அரசு நேரடியாக தலையிட முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். ஆங்கிருக்கின்ற பிரச்னை பற்றி மாண்புமிகு உறுப்பினரும் வழக்கறிஞர் சங்கமும் தற்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்ற காரணத்தினால் உயர் நீதி மன்றத்தின் பரிசீலனைக்கு இது பணிந்தனுப்பப்படும்.